

திசைகளில் விழித்து நிராதரவாய் வெறிக்கின்றன
உனது நீர்த்திரைக் கண்கள்.
அலைகளின் இடைவெளிகளில் உயிர்த்துத் ததும்புகிறது
உனது சோக முகம்.

PARVAI

# பார்வை

மாசி 1989
Feb

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**THAMILAR OLLI ASSOCIATION**

1396, St. Catherine (West)
Suites 226, 227 & 230
Montreal, Que.
CANADA H3G 1P9

ஆசிரியர் : செல்வம்

இணையாசிரியர் : ஜெயராஜ்

வடிவமைப்பு : மூர்த்தி
யோகன்




'தமிழர் ஒளி' மாதவெளியீடு

# பார்வை

## ஆசிரியர் பக்கம்

ஈழம் எம் திரு.நாடு இனிய செந்தமிழ் தாய் நாடு என்ற வாயிலுள் சவாடுவிட்டு வதைகள் வந்தபோது ஒதுங்கியவர்கள் இன்று மக்களினால் ஒதுக்கப்பட்[illegible]


வாக்களிப்பிலும் பகிஷ்கரிப்பிலும் [illegible] முடிவுகளை உணர்த்தியுள்ளார்கள். சொல்லில் [illegible] துயரங்களையும் எழுத்தில் விளங்கா இழப்புக்[illegible] இவ் நிகழ்காலத்தில் சுமந்த போதும் உண்மை[illegible]ட்டித் திடமே மக்கள் இணைகின்றார்கள்.

ஈழக் கோரிக்கை பங்குகத்தில் பிர[illegible]மாவதற்கு தமிழ் அரசியல் வாதிகட்கு அன்றைய தேர்தல் [illegible]ரமமாய் இருந்திருக்கலாம். ஆனால் எம் தேசமக்க[illegible]து இன்று வாழ்வுக்கானதும் இருப்புக்கானதுமான போராட்டமாய் இருக்கின்றது.

துயரினை அறிவோம்
அழுகையை அறிவோம்
மரணத்தை அறிவோம்
அதனை மீறி
எங்களின் வலிமையை அறிவோம்.

எம் தேசக் கவிஞன் ஒருவனின் வரிகளை பொய்யல்ல என்று தேர்தல் அறிவிக்கின்றது.

— செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சேவையில் 'கான்பை'

மலிவு... மலிவு...மலிவு... மலிவு...மலிவு...


உங்கள் தேவை
எங்கள் சேவை

இலங்கை இந்திய கனேடிய
உணவுப்பொருட்களையும்
உங்களுக்குத் தேவையான எல்லாவித
*பலசரக்கு வகைகள்
*அன்றாடபாவனைப்பொருட்கள்
*காய்கறி வகைகள்
எல்லாவற்றையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள

CAN BUY
CHU BAX

5692 VICTORIA AVE. MONTREAL
TEL: 345-8622

சகல விதமான இறைச்சிவகைகளும்
எம்மிடம் உண்டு





உங்கள்
தளபாடங்களை
ஏற்றி இறக்க
எங்களையே நாடுங்கள்!





R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

எமது மண்ணில் இருந்து எழுதப்பட்டு அலை கடல் கடந்து வந்த ஒரு கடிதம் நீண்ட நாட்களுக்குப் பின் என் பார்வைக்கு வந்து சேர்ந்தது. உங்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டிய ஒரு கடிதம் அது, உங்களுக்காக அக்கடிதத்திலிருந்து சில பகுதிகள்.

...எமது போராட்டம் விரும்பியோ விரும்பாமலோ இந்தியாவின் பிடிக்குள் சிக்குப் பட்டாயிற்று. இனி இதன் முடிவு இந்தியாவின் தீர்ப்புத்தான். இந்தியாவுக்கு தென்கிழக்காசியாவுக்கான தனது வல்லரசு ஸ்தானத்தை தொடர்ந்தும் நிறுவிக் கொள்வதைத் தவிர மேலான இலட்சியம் எதுவும் இருக்க நியாயமில்லை. தாங்கள் சுயர் நிர்ணயத்துடன் சுபீட்சமாக வாழ வேண்டும் என்பதெல்லாம் மேற்குறித்த இலட்சியத்துக்கு அப்பாற்பட்ட விடயங்கள்தான்.

இந்த இடத்தில் ஒரு பெரிய ஐயரம். என்னைக் கவ்விக் கொள்கிறது. தாங்கள் இழந்தது, பெற்றது வென்றது எல்லாமும் ஒரு இந்தியாவுக்காக என்று நினைக்கும் போது ஐயரப்பாடம் எப்படி இருப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசாமல் இருப்பது கூட ஒரு பயங்கரமான அரசியல் என்று துவக்குகள் பயமுறுத்தும் போது உயிருடன் இருப்பது மிகவும் சிரமமே. நான் இறப்பது சாத்தியமே. ஆயினும் இன்னும் ஒரு தலைமுறை இருக்கிறது. நெருப்புப் பொறிகள் சிரசில் சுமந்தபடி நீண்டதூரம் நடப்பதற்கு.

.... பற்றி எழுதி இருந்தாயா? அவன்பாவம் நோர்வேக்குப் போவதாகச் சொல்லிக் கொண்டு தற்சமயம் கொழும்பில் நிற்கிறான். அராஜகத்தின் கை அவ்வளவு தூரம் நீளமானது. அது இன்னமும் எவ்வளவு தூரம் நீளும் என்று எனக்குத் தெரியாது. பசிக்கும் போது யாரையாவது பிடிக்கும். அவ்வளவு தான். இந்த புனித பூமியில் துவக்கும் மனச்சாட்சியும் ஒன்றாக இருப்பது ஒரு பெரிய அபத்தம்.

வேறு அதிகம் எழுத முடியாது வருகிற வழியில் யாராவது பிரித்து படித்துவிடக் கூடும் என்கிற பயம். எதற்கும் பதில் போடு அடுத்த கடிதம் வரும் என்று நினைக்காதே நானே வந்து விடக் கூடும்.

தமிழ் ஈழத்தில் அடக்கு முறைகளுக்கு மத்தியிலும் அங்காங்கே சில துண்டு பிரசுரங்கள் வெளிவந்து கொண்டு தான் இருக்கின்றன. இத்தகைய ஒரு துண்டு பிரசுரத்தில் சில பகுதிகளை பாருங்கள்.

...வெறும் தாடி வைத்த முகங்களும் சுவரொட்டிகளில் அழகான கோஷங்களும் சிவப்புக் கொடிகளும் விடுதலை அரசியல் ஆகாது. மாறாக துப்பாக்கி ஏந்தி இருக்கும் ஒவ்வொருவருக்கும் மக்களை நேசிக்கும் நடைமுறை வேண்டும். ஆனால் நீங்களோ



சிவப்புக் கொடிகளை மட்டும் கட்டி பழிவாங்கும் அரசியலை விடுதலை அரசியலுடன் சேர்த்துக் குழப்பி அன்று நீங்களும் பேசிய அரசியலையே கொச்சைப்படுத்துகிறீர்கள். இந்த இறுதிக் கட்டத்திலாவது சிந்தியுங்கள் உங்கள் கையில் உள்ள அந்நியரின் துப்பாக்கிகள் ஒரு நாள் பறிக்கப்படலாம். அப்போது உங்கள் நிலை ?.....

மற்றோர் துண்டுப் பிரசுரம் இப்படிக் கூறுகின்றது.

அலைகடல்களுக்கப்பால் அலையுறும் நெஞ்சங்களுடன் இருக்கும் தோழர்களே....

பழிக்குப் பழி வாங்கும் கொலை வெறியும் பொது மக்களை அச்சுறுத்தும் ஆயுதப்பாவனையும் இன்ன பிறவுமாக நாட்கள் நீடிக்கின்றன. சிறீலங்கா இராணுவத்தையும் இந்திய இராணுவத்தையும் பார்த்து பழக்கப்பட்ட மக்கள் தமது சொந்தப் புதல்வர்களின் அடாவடித்தனங்களையும் அராஜகங்களையும் கண்டு அதிருப்தியுள்ள நிலையில் மனம் புழுங்குகின்றனர். இத்தகைய செயற்பாடுகளை தட்டிக் கேட்பவர்கள் கண்மூடித்தனமாக விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களென குற்றஞ்சாட்டப்படுகின்றனர்.

இவை ஒரு புறமிருக்க, சிறீலங்கா அரசின் செயற்பாடுகளையும் கவனிக்க வேண்டும். முன்னர் 1980 இல் தானே கொண்டு வந்த மாவட்ட அபிவிருத்தி சபைகளை தானே செயலிழக்க செய்து வெற்றி கண்டிருந்தது. சிறீலங்கா அரசு... மாகாணசபை அமைக்கப்பட்ட பின்னும் கூட அதன் செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளுக்கு முட்டுக் கட்டை தொடர்ந்த வண்ணமேயுள்ளது. மாகாணசபை அலுவலமாக்கப்பட்ட திருமலை நகரசபை மண்டபத்துக்கு வர்ணம் பூசும் செலவைத்தானும் ஏற்கக் கொள்ள சிறீலங்கா அரசு தயாராக இல்லையென்றால் நிலைமையை புரிந்து கொள்வீர்கள் தானே. இத்தகைய முட்டுக் கட்டைகளின் ஒரு கட்டம் தான் சிறிலங்கா அரச படைகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் அண்மையில் திருகோணமலையில் இடம் பெற்ற துப்பாக்கி பிரயோகமாகும். இச்சம்பவத்தில் ஏறத்தாள 20 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

..... இப்போது நீங்கள் தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற சூழ்நிலையைப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். இங்கு அமைதியும் சமாதானமும் ஏற்பட்டு விட்டதென மகிழ்ச்சி கொண்டாட எங்களால் எப்படி முடியும்.

—x—x—x—x—





## WHAT HAPPENS WHEN YOU LOVE THE HUMAN RACE

"Man is nothing else than a sack of Dung, the food of worms" said St.Bernard the 12th Century Cleric. 200 years ago a German Poet Joachim Evers wrote "What is a Man? Half Beast, Half Angel". But the Bible says in the book of Genesis that "God crea-ed Man in his own image". This gives us the idea that there is something special about man.

When you Love people, you feel close to them. When you feel close, you understand them, become aware of their needs and their feelings, you know what makes them tick. Their sore points become obvious to you, the things that they are proud about and that which motivates them also becomes obvious.

Abraham Lincoln was said to be "A man of the people". It was this sense of being "Of the people" that made him one of our Greatest Human Beings. Do you have to be of Presidental stature to develop a kinship with your fellow man? No not at all. There was a lady a long time employee in one of New York's largest publishing firms. Her name was Gerry Engelhard. She was the Chief Operator of their phone service. People come to her seeking her advice about their personal problems. A fellow employee once told her "Gerry, you act as though every body is your relative". Gerry said "that's just the way I feel".

This is not a new idea, we all belong to one family, God being our Father, is a very ancient idea. Understand and accept this one idea and you'll never have to worry about your fellow humans again.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SAM - SODHIRAJ

# இதுவும் வேண்டும்...!

அரிசியை அவித்திடுவோம்
அதையே அன்ன மென்போம்
அறுசுவை ருசியென்போம் அதி திறமாய் சமையென் போம்
இதை விட இனியேது அமுதென்போம் உறைப் பென்போம்
உறைப்பையே சிறப்பென்போம்
உணவிற்கு ஊறு மிளகாய்தான் உயிரென்றும்
ஊரில் தலை நிமிர்ந்து உயிர் வாழ்ந்து தலைமுறையாய்
தரை மீது உட்கார்ந்து
தலை வாழையிலை போட்டு
மலை போலக் குவித்து தனிசைகளை
அதன் மேலே தயிரூற்றி
கரை மேலே கறி சேர்த்து கனி ஊறுகாயும் தொட்டு
கத்தரிக்காய் குழம்போடு கருவேப்பிலை மணக்க
பயத்தங்காய் பருப்பு நெய் பாயாசம் பால் பழம்

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323



# இன்னமும் வேண்டும்...!!

இத்தனையும் சேர்த்து இதற்கு மேல் சொதி வேறு
இதமோ இதமென்று இளைப்பாறி விட்டு
தலை தூக்கி எழும்பத் தாங்காது எச்சி இலை தூக்க ஜனம் வேறு
—அவர்கள்.

சரியான சாதியில்லை, சம பந்தியுமில்லை.
சம்பந்தியுமில்லை என மரியாதையும் குறைத்து
சாதி ஜனம் பல வளர்த்து சாதனைகள் செய்தவர்' நாம்
ஜாதி வெறி பிடித்த ஜாதகர்கள் நாம் – இன்று
வேதனையில் வேதனையோ வேலை பல தேடி
வேளை கெட்ட வேளையில் வேலை ஒன்றைப் பெற்று
நடு இராத்திரியில் நம்மவரும் அல்லாத நாலு நாட்டவரும்
நக்கி விட்ட கோப்பைகளை நல் வடிவாய்
நற் சேவை பண்ணி நல்ல டொலர்கள் பெற்றாலும். எமக்கு
இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்.

சம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன்பாடும் தேர்தல் குழப்பங்களும்

குலமோத்தி.

இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதாகக் கூறி இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு ஏறக்குறைய ஒன்றரை வருடங்களுக்கு மேலாகி விட்டது. தேர்தல் என்ற நாமகரணம் சூட்டி இரண்டு தடவைகள் தில்லுமுல்லுக்கள் நடந்தேறிவிட்டன. இதில் முதலாவதாக நடந்த மாகாண சபைத் தேர்தலை விமர்சிப்பதில் எந்த பிரயோசனமுமில்லை. ஏனென்றால் அது தேர்தலே இல்லை. புது டெல்லி குழப்பத்தை மேலும் குழப்ப விரும்புகின்றதா? அல்லது குழப்பத்தை தீர்க்க விரும்புகின்றதா? புரியாத புதிராகத் தான் இருக்கின்றது. ஆனால் இந்த விடயத்தில் புது டில்லியே குழம்பி போய்தான் இருக்கின்றது என்று கூறுவது தான் உண்மை நிலை போல் தெரிகின்றது.

அண்மையில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல், தேர்தலுக்கு முன்னோடியாக (பரீட்சார்த்தமாக)



இருப்பதால் விமர்சனத்தின் தகுதியைப் பெறுகின்றது. நடந்து முடிந்த வடக்கு கிழக்கு பாராளுமன்ற தொகுதிகளில் தேர்தலில் EROS 13 ஆசனங்களையும், EPRLF கூட்டணி 10 ஆசனங்களையும் UNP, SLFD முஸ்லீம் காங்கிரஸ் மிகுதி ஆசனங்களையும் பெற்றிருக்கின்றனர். இந்த தேர்தலைப் பொறுத்த வரையில் மக்கள் சரியான ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றார்கள் என்பதையிட்டு மகிழ்ச்சியடைய வேண்டும். தேர்தலைப் புறக்கணிக்கும்படி விடுதலைப்புலிகளின் எச்சரிக்கையும் தேர்தலில் வாக்களிக்கும்படி இந்திய இராணுவத்தின் அச்சுறுத்தலும், தங்கள் தங்களுக்கே வாக்களிக்கும்படி ஆயுதம் தாங்கியவர்களின் அடாவடித்தனம். இவ்வளவு தொல்லைகளையும் மீறி சிந்தித்து செயல்பட்டிருப்பது வரவேற்ற வேண்டிய விடயம்.

ஒரே வார்த்தையில் கூறப்போனால் மாகாண சபை அமைத்தபின் EPRLF கூட்டணியினர் நடந்து கொண்ட நடைமுறைகளை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதே நேரத்தில் உடன்பாட்டிற்குப்பின்பு விடுதலைப்புலிகள் நடந்து கொண்ட நடைமுறைகளையும் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. EROS குழுவினர் இந்த வெற்றியை தங்களுக்கு கிடைத்த வெற்றியாக கொண்டாடிவிட முடியாது. ஏனென்றால் இவர்கள் பிரச்சனைகளுக்கு தீர்க்கமான முடிவையோ? அல்லது ஒப்பந்தத்தை முற்றாக நிராகரிக்கின்றோம் என்றோ தேர்தலில் பங்கேற்கவில்லை. எடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்த வரையில் பேச்சுத் துணைக்கு வேண்டுமானால் இருக்கட்டும் பரவாயில்லை ஆனால் தமிழர்களின் தலைவிதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணயிக்க வரவேண்டாம். என்று மக்கள் பதில் கொடுத்திருக்கின்றார்கள். மொத்தத்தில் இலங்கை இந்திய உடன்பாட்டை நிராகரித்து இந்திய இராணுவத்தை வெளியேற்றுவது மக்களைப் பொறுத்தவரையில் தற்போதைய சூழ்நிலையில் உடன்பாடான விடயமல்ல.

அதேவேளை போராளிகளின் தியாகங்களை மதிக்கின்றார்கள். அராஜகங்களை வெறுக்கின்றார்கள் இவர்களின் தலைமையை ஏற்க மக்கள் தயாராக இருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் பெரும் பாலான விடயங்களுக்கு துப்பாக்கியையே நம்பி செயல்படுகின்றார்கள்.

விடுதலைப்புலிகளை நிராகரித்த எந்த ஒரு அரசியற் தீர்வும் தமிழீழத்தில் ஒரு நிரந்தர சமாதானத்தைக் கொண்டு வர மாட்டாது. அதனால் அவர்களின் செயல்கள் எல்லாம் சரியென்றாகி விடாது. எல்லாக் கால கட்டங்களிலும் ஒரே மாதிரியான அணுகு முறை பயன் தராது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தற்போது EROS குழுவினர் தாக்கப்படுவது எந்தவகையிலும் சரியான ஒன்றல்ல.

EROS க்கு அதிக ஸ்தானங்களைக் கொடுத்த மக்களின் தீர்ப்பு இயலாமையின் வெளிப்பாடு. சகல அராஜகங்களையும் வெறுத்தநிலை. இந்த தாக்குதலைச் செய்பவர்கள் மீண்டும் மக்களால் ஒதுக்கப்படுவார்களே தவிர வேறில்லை.

ஆக மொத்தத்தில் சகல வன்முறைகளையும் நிறுத்திய ஒரு சமாதானத் தீர்வையே மக்கள் வேண்டி



நிற்கின்றனர். கடந்த காலங்கள்தான் கசப்புடன் கழிந்து விட்டன, எதிர்காலத்திலாவது சகல தரப்பினரையும் இணைத்து- இணைந்த தீர்வை முன்வைத்து நாட்டிற்கு அமைதியைத் தேடித்தர வேண்டும் என்பதே சகலரினதும் விருப்பம்.

---

முற்போக்கு இலக்கியம் என்றால் என்ன?

எனக்கு இந்த முற்போக்கு என்ற அடைமொழியே பிடிக்க வில்லை. அது ஒரு திருகப்பட்ட அர்த்தத்தைத்தான் கொடுக்கிறது. மனிதனின் பிரச்சனைகளை மிக அக்கறையோடு அணுகும் கலை நிறைந்த இலக்கியங்கள் எல்லாம் முற்போக்கு இலக்கியங்கள் தான். இலக்கியத்தை முற்போக்கு இலக்கியம் பிற்போக்கு இலக்கியம் என்று பிரிக்க முடியுமானால் முற்போக்கு இலக்கியத்தையும் அதி முற்போக்கு இலக்கியம், அதி அதி முற்போக்கு இலக்கியம் என்று உலகத்தில் எத்தனை தரமான எழுத்தாளர்கள் இருக்கிறார்களோ அத்தனை பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டே போகலாமே. எனவே இலக்கியம் என்றாலே முற்போக்கு இலக்கியம் தான் என்பது என் கருத்து. இலக்கியம் என்றால் முற்போக்கு இலக்கியம், முற்போக்கு இலக்கியம் என்றால் இலக்கியம்- அதுதான் நான் நினைப்பது. தரமற்றவற்றை இலக்கியத்துக்கு உயர்த்திப் பின்பு அவற்றை வேறுபடுத்த முயலும் போது தான் முற்போக்கு இலக்கியம் என்ற பெயர் எழ வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

மு. தளையசிங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றே நீ கண்டாயோ...

## கந்தசாமி என்றொருவர்...?

# காணவில்லை



## க. கந்தசாமி

சட்டத்தரணி—சமூகசேவகர்

1988ஆம் ஆண்டு ஆவணி மாதம் 19ஆம் திகதி காலை முதல் இல.187, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்திலிருந்து காணவில்லை. அவரைப்பற்றிய தகவல் ஏதேனும் உண்டானால் பின்வரும் இருவரில் ஒருவரிடம் அறிவிக்கவும்.

| | |
|---|---|
| திரு. சு. சிற்றம்பலம் | திருமதி சூரியா விக்ரமசிங்க |
| சட்டத்தரணி | சட்டத்தரணி |
| 3A, கின்ஸி ரோட், | 31, சார்ல்ஸ் பிளேஸ், |
| கொழும்பு-8. | கொழும்பு-3. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவரின் விஞ்ஞானக் கல்வி

## — ஒரு கண்ணோட்டம்

பாரதி ரேசன்

நன்றி: திசை

...இதனால் தான் ஈழத் தமிழன், இலங்கை சனத்தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது 90% வீதம் படித்தவனாய் இருந்தும் தனது விடுதலையை வென்றெடுக்கத் தெரியாதவனும் தன்னினத்தை ஆளும் தகமை அறியாதவனாய் 40 வருடங்களுக்கு மேலாக காலத்தைக் கழித்திருக்கிறான். இதனை தான் இவன் தனது அரசியலை ஆங்கிலேயர்போல் அபிநயித்து ஆங்கிலம் பேசும் அப்புக்காத்துமாரிடம் ஒப்படைத்துவிட்டு பார்த்திருக்கிறான். இந்த அப்புக்காத்துமாரோ தமது கலை, கலாச்சார, வரலாற்று அரசியல் அறிவு அழுங்களையோ அல்லது மேல்நாட்டு விஞ்ஞான ரீதியான பொருளாதார, சமூக அரசியல் அணுகு முறைகளையோ அறியாத வெறும், தமிழர்களுக்கே உரிய 'புத்திசாலி'த்தனமான ரெக்னிக்கல் (TCHNICAL ) விடயங்களில் திறமை காட்டுபவர்களாகவே இருந்துள்ளனர். கோர்ட்டில் வழக்காடி தமது அரசியல் யாப்பு விதிகளில் பிழை காண்பதன் மூலம் அத்தகைய ரெக்னிக்கல் விடயங்கள் மூலம் மட்டும்– தமது விடுதலையை

வென்றெடுத்து விடலாம் என்று கனவு கண்டவர்களே இவர்கள் –

இன்றைய விஞ்ஞானக் கல்வியில் நம் தமிழ் மாணவர்கள் என்ன வெளிச்சம் காண்கிறார்களோ அதேவிதமான 'வெளிச்'சத்தைத்தான் அன்றைய ஆங்கிலக்கல்வி அவர்களுக்குக் கொடுத்தது.

இதை மறுபக்கமாகப் பார்த்தால் முன்னைய ஆங்கிலக்கல்வி இருந்த நிலையில் தமிழ் மாணவரிடம் இன்று விஞ்ஞானக் கல்வி அகப்பட்டு அவஸ்தைப்படுகிறது என்றே சொல்லவேண்டும்.

இந்த நிலையை மாற்றுவது எப்படி?

இதை மாற்ற வேண்டுமானால் தமிழ் மாணவரிடையே புரையோடியுள்ள இந்தச் சமன்பாட்டை மாற்ற வேண்டும்.

சயன்ஸ் படிப்பு = உத்தியோகம்.
உத்தியோகம் = நல்ல சீதனம்
நல்ல சீதனம் = தானுண்டு தன்குடும்பமுண்டு என்ற சொகுசான வாழ்க்கை முறை.

இப்படி அமைந்துவிட்ட இந்த "விஞ்ஞானச்சமன்பாடு' இன்று நீக்கப்படவேண்டும்.

ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொடுத்து தமிழ் மக்கள் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் கூட இந்தச் சமன்பாடே தமிழ் மாணவர் பெற்றோர் மத்தியில் வேரூன்றி உள்ளதெனில் நாம் வெட்கப்பட வேண்டிய ஒன்றே.

விஞ்ஞானப் படிப்போ கலைப்படிப்போ அல்ல நமக்கு உத்தியோகம் தருவது என்ற உண்மை மக்கள், மாணவர் பெற்றோர் மத்தியில் விளக்கப்படவேண்டும். திட்டமிடப்படாத பொருளாதாரச் சிக்கல்களோடு இன்று நாடு போகிறபோக்கில்



இன்னும் கொஞ்சக் காலத்தில் டொக்டர், இஞ்சினியர் போன்றோரும் வெயிட்டிங் லிஸ்டில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடும் என்பதில் சந்தேகம் இல்லை.

இது எதைக் கட்டுகிறது?

படிப்பின்துறை அன்று உத்தியோகத்தை நிர்ணயிப்பது ஒரு நாட்டை ஆளும் அமைப்புத்தான் உத்தியோகத்தை நிர்ணயிப்பது என்பதே. திட்டமிட்டகல்வியும், பொருளாதாரத் திட்டமிடலும் இவற்றைத் தரக்கூடிய அரசியல் அமைப்பொன்றும் தோன்றாத வரைக்கும் இந்த உத்தியோகப் பிரச்சனை நீடித்துக் கொண்டு தான் இருக்கும். ஆகவே உத்தியோகம் தங்கியிருப்பது படிப்பிலன்று நம்மை ஆளும் அமைப்பில்.....

இந்தத் தெளிவு நமக்கு அவசியம்.

தெரியவில்லை...

திக்குகள் எட்டும் சென்று
சேர்த்து வருக கலையெல்லாம்
என்றது ஓர் குரல்.
சரி வந்தாயிற்று;
இவைகளை வைத்துக்கொண்டு
இனி என்ன செய்வதென்றே
தெரியவில்லை
□

பிரதீபன் கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது தமிழ் இலக்கியம்?

க. நா. சுப்ரமண்யம்



**இன்றைய தமிழ் இலக்கியத்தில் மிகப் பெரிய விமர்சகரும் தமிழில் தலை சிறந்த எழுத்தாளருமான க. நா. சுப்பிரமணியம் டிசம்பர் மாதம் 16ம் திகதி புதுடில்லியில் காலமானர். அவர் நினைவாக இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

சிந்தனைகள் என்றால் எல்லாவற்றை யும் பற்றித்தான் இருக்கவேண்டும். இலக்கியச் சிந்தனைகள் என்று தனியாக ஒன்றுண்டா? தனித் தமிழ் என்று மாதிரி இது ஒரு செயற்கையான விஷயம் அல்லவா என்று விஷயம் தெரிந்த நண்பர் ஒருவர் சென்றவாரம் என்னைக் கேட்டார்.

வாழ்க்கை வாழ்வதற்கே. இலக்கியமும் வாழ்க்கை வழியை அறிந்து கொள்வதற்காகவே அன்றி வேறுவிதமாக இருக்கமுடியாது என்றும் சொல்லலாம். ஆஸ்கர் வைல்டு சொன்ன மாதிரி வாழ்க்கை இலக்கியத்தைப் பின்பற்றுகிறது என்றும் சொல்லலாம். ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்த விஷயங்களை யெல்லாம் பற்றித் தீவிரமாகச் சிந்தித்த தண்டகர் என்பவர், "சிறப்பான இலக்கியம் எல்லாமே யதார்த்தமானதுதான்" என்று சொன்னர். ஒரு காலத்தில் ஐரோப்பியர்களிடையே கலை கலைக்காகவே என்று ஒரு சிந்தனை இருப்பதாகவும், இது தவறு என்றும் சொல்லுகிற பழக்கம் ஏற்பட்டது. மார்க்ஸியவாதிகள், முக்கியமாகக் கலை கலைக்காகவே என்கிற வாதத்தை ஆணித்தரமாக மறுத்து எடுத்துரைத்திருக்கிருர்கள்.

வாழ்க்கைக்கும் இலக்கியத்துக்கும் உள்ள சம்பந்தத்தை சிருஷ்டி நோக்கிலிருந்து அறிந்து கொள்வது சிரமமான விஷயம்தான். மணிக்கொடி ஸ்ரீனிவாஸன் என்பவர் பல சமயங்களில் ஒரு கேள்வி கேட்பார், "கல்கத்தா மெயில் எந்த இடத்தில் எந்த விஷயத்தில் மதருஸ் மெயில் ஆகிறது?" என்று. அதுபோலத்தான் கலைக்கும் வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தம். எது கலை, எது வாழ்வு என்று தெரிந்துகொள்ள இயலாதபடி வாழ்பவனை நல்ல வாழ்வு வாழ்ந்தவன் என்று சொல்ல எனக்குத் தோன்றுகிறது. அமெரிக்காவில் ஒரு பிரபல விமரிசகன் தனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் முத்தம் கொடுப்பது என்கிற அனுபவத்தை அப்படியே தர எண்ணியவர் அதை அனுபவிக்க ஆரம்பித்து அதை எழுத்தில் வடிக்கிற எண்ணத்தையே மறந்து விட்டார் என்று தெரிவிக்கிருர். இந்த மாதிரி வாழ்க்கை அனுபவத்தைத் தேடிப் போகிறவர்களுக்கு இலக்கியம் உபயோகப்படாது போய்விடலாம். ஆனல் இலக்கிய அனுபவத்தை இலக்கிய அனுபவமாக ஏற்றுக்கொண்டு அதை வாழ்க்கைக்கு உதவியாக வைத்துக் கொண்டால் அது பூரண திருப்தியளிக்கும் என்றே எனக்குத் தோன்றுகிறது.

∴ ∴ ∴

சமுதாயம் இலக்கியத்தைப் பாதிக்கிறது—படைப்பதில்லை. தனி மனிதர்கள் வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டு தாங்கள் தங்கள் திறமைக்கேற்ப இலக்கியம் படைக்கிருர்கள். இந்த இலக்கியம் சமுதாயத்தை உடனேயோ அல்லது நாட்கழித்தோ பாதிக்கிறது என்று சொல்வது பொருந்தும். Life imitates art என்று ஆஸ்கர் வைல்டு சொன்னர். அவர் சொன்னதை நகைச்சுவையாக எடுத்துக் கொள்பவர்தான் நம்மிடையே அதிகம்.



சமுதாய முன்னேற்றத்தை நினைத்துக் கொண்டு சிந்திப்பதும் சிருஷ்டிப்பதும் ஒரு வகை. புத்தர், ஏசு, முகம்மது நபி போன்றவர்கள் சமுதாய முன்னேற்றத்துக்காகச் சிந்தித்து செயலாற்றிச் சொல்லியிருக்கிருர்கள். அவர்கள் முயற்சிகளினுல் ஓரளவுக்குச் சமுதாயம் சீர்திருந்தியிருப்பது தெரிந்தாலும், இது நாய் வாலை நிமிர்த்துவது போன்ற காரியம்தான். இன்னும் பல ஏசுகள், புத்தர்கள், முகம்மதுகள் தோன்ற வேண்டும்—அதற்கு அவசியம் மனித குலத்தில் இருந்துகொண்டேதான் இருக்கும் என்று தோன்றுகிறது.

சமீபத்தில் நான் இன்றைய தமிழ் இலக்கியப் போக்குகள் என்கிற விஷயம் பற்றிப் பேச நேர்ந்தது. என் வழக்கப்படி வேதநாயகம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதி என்று தொடங்கி புதுமைப்பித்தன், மௌனி என்று அசோகமித்திரன், கந்தசாமி, பூமணி, வண்ண நிலவன், நாஞ்சில் நாடன் என்று ஒரு (எனக்குத் தெரிந்த என் வாசகர்களுக்கும் என்னிடமிருந்து) பழக்கப்பட்டுப்போன ஒரு பட்டியலைச் சமர்ப்பித்தேன். கேட்டவர்களில் ஒருவர் இதை மட்டும் இலக்கியம் என்று ஏற்க முடியுமா, அரசியல் போக்குகள் பலவும் கம்யூனிஸம், திராவிடம் முதலியன படைத்த நூல்கள் இலக்கியமல்லவா என்று கேட்டார். இப்படிப் பார்ப்பது சரியல்ல; இலக்கியம் இலக்கியமாக முதலில் இருக்க வேண்டும், பிறகு அது கம்யூனிஸ்மா, திராவிடமா என்று பார்க்கலாம். அப்படிப் பார்த்தால் தேவி கருமாரியம்மன் தாலாட்டுப் பாடல்களும் இலக்கியம்தான்; முருகன் அருள் வேட்டலும் இலக்கியம்தான். இவற்றுக்கெல்லாம் திராவிட, கம்யூனிஸ்ட் கட்சிகள் சம்மதிப்பார்களா? என்று பதில் கேள்வி கேட்டேன். சித்தாந்த அளவில் ஒன்றை ஏற்றுக்கொண்டால் ஒவ்வொன்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இலக்கியம் இலக்கியமாக இருக்க வேண்டிய அவசியம் மறந்து போய்விடுகிறது.

அதே கூட்டத்தில் நன்றி சொல்பவர் இன்னெரு விஷயம் சொன்னர். அதற்குப் பதில்சொல்ல அங்கு எனக்கு இடமில்லாது போய்விட்டது. இங்கு சொல்லலாம் என்று தோன்றுகிறது. சொல்லுகிறேன்.

தமிழ் இலக்கியம் என்று சொல்லிக் கொண்டு, தமிழ்நாட்டு இலக்கியத்தைப் பற்றி மட்டும் கவனிக்கக்கூடாது என்றும், ஈழத்தில் மற்ற ஸ்ரீலங்கா பகுதிகளில், மலேசியாவில், மற்றும் ஃபிஜித் தீவில், மடகாஸ்கரில் தமிழர் பலர் எழுதுகிருர்கள்—அங்கெல்லாம் இலக்கியமிருக்கிறது. அவற்றையும் கவனிக்க வேண்டும் என்றார்.

ஓரளவில் இது சரியான விஷயமாகவே தோன்றுகிறது. எனினும் ஒரு உதாரணத்தைக் கொண்டு விளக்கினுல் விஷயம் புரியும். இங்கிலாந்தில் எழுதப்படுகிற இலக்கியத்தை ஆங்கில இலக்கியம் என்கிறேம்—அமெரிக்காவில் எழுதப்படுகிற (ஆங்கிலத்தில்தான்) நூல்களை அமெரிக்க இலக்கியம் என்கிறேம். ஆஸ்டிரேலிய இலக்கியம் ஆங்கில மொழியில் எழுதப்பட்டாலும்கூட ஆங்கில இலக்கியத்தில் சேர்க்கப்படுவதில்லை. அது ஆஸ்டிரேலிய இலக்கியமாக இருக்கிறது. இந்தியாவில் ஆங்கிலத்தில் எழுதுகிற ஆர். கே. நாராயண், முல்க்ராஜ் ஆனந்த் போன்றவர்களுக்கு லண்டனில் பரிசுகள் கிடைக்கலாம். ஆனல் அவர்களுடைய நூல்கள் ஆங்கில இலக்கியத்தில் இடம் பெறுவதில்லை. இதே மாதிரிதான் ஜெர்மன், ஃபிரெஞ்சு இலக்கியங்களும் மற்ற ஆங்கில இலக்கியங்களை (அமெரிக்காவைத் தவிர) காமன்வெல்த் இலக்கியம் என்கிருர்கள்.

இதேபோல தமிழ் இலக்கியம், கால தேச வர்த்தமானங்களை உத்தேசித்துத் தமிழ்நாட்டில் எழுதப்படுகிற இலக்கியம் ஈழத்துக்காரர் ஒருவர் தமிழ்நாட்டில் தங்கி இலக்கியம் செய்கிறபோது அதையும் தமிழ் இலக்கியம் என்று சொல்லலாம் மற்றப்படி அது ஈழத்தமிழ் இலக்கியம் தான்; மலேசியத் தமிழ் இலக்கியம்தான் ஈழத்தில் நல்ல தமிழ் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் உண்டாகவில்லை என்பதல்ல இதன் அர்த்தம். இலக்கியமும் சமுதாய கால தேச வர்த்தமானங்களை, தழுவி நிற்கிறது என்பதுதான் விஷயம்.

∴ ∴ ∴



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதநேயம், பிறரிடம் ஈடுபாடு, தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்ற வேண்டும் என்கிற ஊக்கம் எல்லாம் ஏட்டுச் சுரைக்காயாக இலக்கிய நூலிலோ சினிமாவிலோ இடம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. இலக்கியத்தில் எவ்வளவு சுத்தமாக இவை அமைந்திருக்கின்றன என்பதைப் பொறுத்தது இந்த நயம். நுனி நாக்கினால், பத்திரிகை எழுத்தும் வியாபார சினிமாவும் அமைகிற அளவில் மனிதநேயம் அமைந்தால் போதாது. சினிமாவிலும், வியாபார இலக்கியத்திலும் போலித்தனமான பல விஷயங்களில் இந்த மனித நேயமும் ஒன்று சொல்லலாம்.

அதே மூச்சில் எழுதுவது என்பதும், உண்மை ஒளி உள்ள இலக்கிய சிருஷ்டி என்பதுமே மனித நேயத்தின் அடிப்படையான ஒரு வெளிப்பாடு என்றுதான் சொல்லவேண்டும். அதேபோல எழுதி எழுத்தில் இலக்கிய நயமும் தரமும் காட்டுகிற எந்த இலக்கியாசிரியனுமே முற்போக்காளன் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. பெயர் சொல்லக்கூடிய எந்த இலக்கியாசிரியனும் மனித குல முன்னேற்றத்தையும் சிந்தனைகளையும் ஏற்றுக்கொண்டுதான் செயல்படுகிறான். என் குலம், என் இனம் பிற்படுத்தப்படவேண்டும் என்று நினைக்கிற எவனும் இலக்கிய சிருஷ்டி, கலாசிருஷ்டி என்பதில் ஈடுபட முடியாது என்றே எனக்குத் தோன்றுகிறது. மேன்மையான கலைகள் எல்லாம், மேன்மையான இலக்கியம் எல்லாம் மனித குலத்தை உயர்த்தவே பாடுபடுகின்றன. எது முன்னேற்றம் என்று யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் விவாதம் நடத்தலாம். அது பட்டிமன்ற விவகாரம்.

அதேபோல ஒரு விதத்தில் பிரசார நோக்கம், இலக்கு இல்லாத எழுத்தே உலகில் எங்கும் கிடையாது. டாஸ்டாவ்ஸ்கியை ஆன்மிகப் பிரசாரகர் என்று இர்விங் ஹோ என்கிற ஒரு விமரிசகர் எழுதியிருக்கிறார். ஆனால் பிரசாரம் வெளிப்படையாக, கலை உருப்பெறுமல் தரிகிற இடங்களெல்லாம் இலக்கியமாவதில்லை.



பிரசார எழுத்தாளர்களில் மகாவும் உன்னதமானவர் என்று டால்ஸ்டாயைச் சொல்லவேண்டும். ஆனால் அவரே பிரசாரகராக முழு வெற்றி பெறவில்லை என்றும், அவரே செய்யமுடியாத காரியத்தை நாம் முயற்சிப்பது வீண் என்றும் ஐஸக் பாஷேவிஸ் ஸிங்கர் என்ற போலிஷ்-யூத-அமெரிக்க இட்டிஷ் மொழியாசிரியர் ஓரிடத்தில் கூறியிருக்கிறார். இது பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியம் என்றே எனக்குத் தோன்றுகிறது. □

## கோர்ப்பசேவ் கொடுத்த நிதி!



ரஷ்ய அதிபரின் புகழ்பெற்ற 'பெரஸ்த்ராய்க்கா' புத்தகம் அமெரிக்காவில் பிரசுரமானதையொட்டி ஆறு லட்சம் டாலர் ராயல்டியாகக் கிடைத்திருக்கிறது. இந்தத் தொகையை அப்படியே கம்யூனிஸ்ட் கட்சிக்கு நிதியாகக் கொடுத்துவிட்டார் கோர்ப்பசேவ்!

இது கோர்ப்பசேவின் 'ஹீரோ இமேஜை' இன்னும் உயர்த்தி விட்டது.

# பெண்கள் துணியவேண்டும்..



— விஜயகுமித்தி —.

இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைப்பதற்கு இன்னும் ஒரு சில ஆண்டுகள் தான் பாக்கியிருக்கின்றது. உலகம் எவ்வளவோ முன்னேறிவிட்டது. பொறியியல் விஞ்ஞானம், மருத்துவம், வானியல் என்று சகல துறைகளிலும் வியக்கத்தகு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இச்சகல துறைகளிலும் பெண்களின் பங்கு பாதிக்கு மேலாய்ப் பதிந்துள்ளது. கடந்த பத்தாண்டு காலவிட இந்த பத்து ஆண்டுகள் பெண்களின் பங்களிப்புக்கு கூடுதலான இடத்தை கொடுத்திருக்கின்றதென்றே கூறலாம்.

ஆனால் பாலியல் ரீதியாக பெண்களின் மேல் சுமத்தப்படும் பாரம் தொடர்ந்தும் நடந்து கொண்டே வருகின்றது. இது முன்னேறிய மேலைத் தேச நாடுகளிலும் சரி பின் தங்கிய மூன்றும் மண்டல நாடுகளிலும் சரி சோஷலிச நாடுகளானாலும் சரி இந்த நிலை காணப்படுகின்றது. இது பற்றிய விவாதங்கள் இன்னும் தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றது. இது பெண்களின் உடற்கூறு- உடல் அமைப்பு என்பன வேறுபாட்டால் ஏற்படும் தவிர்க்க முடியாத பிரச்சனை. இப்பிரச்சனைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதித் தீர்வு காண்பது, ஆண்களும் கர்ப்பம் தாங்கும் நிலையின் தொடக்கத்தில்தான்.. பெண்களுக்கு சுதந்திரம் வேண்டும், விடுதலைவேண்டும், பெண்ணடிமை நீங்க வேண்டும் என்ற கோஷங்கள் மிகப்பரந்த அளவில் ஜனரஞ்சகமாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வைக்கப்படுகின்றது. இது ஒரு சிலரின் அல்லது ஒரு சில அமைப்புக்கள், குழுக்களினதும் விளம்பர அல்லது வியாபாரப்பிரச்சாரமாக இருக்கின்றது. ஆக்கபூர்வமாக இருப்பது மிகக்குறைந்த அளவில்தான். ஆனால் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், பெண்களுக்கான சுதந்திரம் மேற்குறிப்பிட்ட நாடுகளில் நிறையவே இருக்கின்றது. அரசாங்கம் பெண்களுக்கான சில விசேட சட்டங்கள் கூட இயற்றியுள்ளது. இருந்தும் பெரும்பாலான பெண்கள் அடக்குமுறை வட்டத்திற்குள்ளேயே வாழ்க்கையை ஓட்டுகின்றனர். தாங்களே தங்களை அடிமைத்தனக்குள் திணிக்கும் வகையிற்தான் பெரும்பாலான பெண்களின் செயல் காணப்படுகின்றது. இதற்கு கலாச்சாரம் என்கின்ற மருந்தை ஒத்தடமாக தடவிக் கொள்கின்றனர். இதில் சமூகவியல், வாழ்வியல், பிரச்சனைகள் அடங்கியிருக்கின்றதென்பது மறுக்கமுடியாத உண்மைதான் ஆனால் வாழ்வியலில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான பங்கு உண்டு என்பதை பெரும்பாலான பெண்கள் உணரத்தவறுகின்றனர்.

இந்நாடுகளின் பொருளாதாரத்துறையில் பெரும்பாலும் பெண்கள் ஆண்களையே நம்பியிருப்பது ஏற்க கூடிய காரணமாக இருந்தாலும்

1. மிகமிக குறைந்த மனத்துணிவும்
2. சிறுவயதிலிருந்தே பெண்பிள்ளைகளை கோழைத்தனமாக வளர்க்கப்படுவதும்



3. உயர்கல்வியைக் கற்றும் கூட கலாச்சாரம் மதம் என்பவற்றுக்குள் இருக்கும் மூட நம்பிக்கைகளைப் பின்பற்றுவதும்

இந்த நிலைக்கு காரணமாக அமைகின்றது. உதாரணத்துக்கு கூறப்போனால் பல்கலைக்கழகங்களில் நாடகங்கள் தர்சங்கள் அமைத்து பெண்விடுதலை பற்றி முரசு கொட்டும் பெண்கள் பலர் சொந்த வாழ்க்கையில் அடிமைகளாகி ஆணாதிக்கத்தை எதிர்த்துப் போதாத திராணியற்றவர்களாக பிரச்சனைகளுக்குள் கிடந்து உழலுகின்றனர்.

ஆக மொத்தத்தில் பெண்கள் தங்களுக்குரிய இடத்தை எடுத்து செயற்படாத வரைக்கும் இந்நிலை நீடித்துக் கொண்டேயிருக்கும். போராட்டமூலம் விடுதலையடைந்த சில நாடுகளில் பெண்களின் பங்குமிக உன்னதமானதாக காணப்படுகின்றது. இந்தவகையில் தமிழீழத்தில் உள்ள பெண்களின் நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைக் காணலாம். ஆயுதப்போராட்டத்திலும் அரசியல் போராட்டத்திலும் பெண்களின் பங்களிப்பு காத்திரமான ஒன்றாக இருக்கின்றது. மிகவும் பழமையைப் பேணுவதும், சமயாசார சடங்குகளைக் கூறி பெண்களை வீட்டுக்குள்ளேயே முடக்கி வைத்திருந்ததுமான ஒரு சமுதாயத்தில் எதிரியின் பாலியலையைக் கூட நிராகரித்து போராட்டத்தில் முன்னேறும் தமிழ் பெண்கள் வரலாற்றுப் பெருமைக்குரியவர்கள்.

ஆனால் அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ள ஒரு துரதிஷ்டமான நிலையையும் நாம் கூறாமலிருக்கமுடியாது. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் சொந்த நாடுகளுக்கு சென்று திருமணம் முடிக்கும் போது ஏற்படும் கிராக்கியும், சீதனச்சந்தை உச்ச நிலையில் இருப்பதையும் பார்க்கும் போது பழையபடி வேதாளம் முருங்கைமரத்தில் ஏறும் கதைதான் என்ன விலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தாலும் கனடா மாப்பிள்ளையை எடுக்க வேண்டும் என்ற ஆசை எத்தனையோ பெற்றோர்களுக்கு இருக்கின்றது. அன்று லண்டன் – இடையில் சவுதி, இன்று கனடா நாளை...
சமூகம் எவ்வளவு தான் முன்னேறினாலும் பெண்கள் அறிவிலிகளாகக் கழுத்தை நீட்டும் நிலை இருக்கும் வரைக்கும் இது மாறப் போவதில்லை.

ஆணாதிக்க சமுதாயம் தன் நிலையை தானாக விட்டுக் கொடுக்கப்போவதில்லை. அதே நேரத்தில் பெண்கள் தங்களுக்கான சுதந்திரத்தை கையிலெடுத்துச் செயற்பட்டால் அதை முழுவதுமாக எதிர்க்கும் வலுவும் இவர்களுக்கில்லை. மீண்டும் சொல்வதானால் பெண்கள் தங்களுக்கு வேண்டிய சுதந்திரத்தை தாங்களே எடுத்துச் செயற்பட வேண்டும். தவிர யாரும் தருவார்கள் என எதிர்பார்க்க கூடாது. சட்டங்கள் இருபாலருக்கும் சமமாகவே பெரும்பாலான நாடுகளில் இயற்றப்பட்டுள்ளது. சமுதாயம் தன் தேவையை முன்னிட்டு வழக்காறுகளை மாற்றிக்கொள்ளலாம். அல்லது திருத்திக் கொள்ளலாம். " வழக்கங்களும் வழக்காறுகளும் சட்டங்களும், மனிதசமுதாயம் மனிதனாக வாழ்வதற்காகத்தான்" தேவைகள் ஏற்படும் போது அவைகள் விரிவடைவதில் தவறில்லை.

எமது உன்னதமான கலாச்சாரம் தொடர்ந்தும் வாழ வேண்டுமாயின் மாறிவரும் நவீன உலகத்திற்கேற்பவும் சூழ்நிலைக் கேற்றவாறும் திருத்திக்கொள்ளுதல் வேண்டும். இல்லையேல் கலாச்சாரம் ஒரு விலங்கு என நினைத்து அதை முற்றாக மீறும் முயற்சியில் இளைய தலைமுறையினர் ஈடுபடுவதை நிறுத்த முடியாமற் போய் விடும். அங்குதான் இந்த நிலை என்றால் முன்னேறிய நாடுகளுக்கு



வந்தால் "துறயிக் கந்தல் அரைபடியாக்க" என்றும் பேரம் பலத்தார் கனடா வந்துவிட்டார் என்றும், கப்பாடு போடுகின்றார்கள் சிலர். தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ப மனி. தன் தன்னைத்தயார் படுத்திக்தான் ஆகவேண்டும் என்பதை மறந்து விட்டார்களா? உதாரணத்திற்கு குளிருள்ள கனடாநாட்டில் வசிக்கும் ஒரு தமிழ் பெண் நீண்ட கூந்தலை வைத்துப் பராமரிப்பது சிரமமாக இருக்கலாம். கூந்தலை உலரவைப்பதற்கு (HAIR DRYER) முடி உலர்த்தி பாவிப்பதால் பலருக்கு தலைவலி ஏற்படுவதும் உண்டு. இப்படி எமது நாட்டுக்கும் குளிர் நாட்டுக்கும் உள்ள வேறுபாடுகளால் சிலமாற்றங்களை அவசியம் செய்தாக வேண்டியநிலை உள்ளது. கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் கட்டிக்காப்பதும் அதன்படி நடப்பதும் பெண்களுக்குத்தான் என நினைக்கும் தமிழ் ஆண் சமுதாயம், அங்கும் இருக்கின்றார்கள். இங்கும் இருக்கின்றார்கள். முன்னேறிய நாடுகளில் அவர்கள் இருந்தும் அவர்கள் மட்டும் முன்னேறாமல் இருப்பது விந்தைக்குரியதே. வேகமான உலக சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ப எங்கள் சமுதாய வளர்ச்சியும் அமையவேண்டும். இல்லையேல் நிச்சயமாக நாம் தூக்கி வீசப்படுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்தமனம்


இந்த வரலாற்றில்
இது புதிது! இது புதிது!!

தெற்கினிலே எங்களது
சூரியனின் அஸ்தமனம்.
வைகறையில் உதயத்தில்
வாழ்வு நிமிருமென்று
பொய்களினை எண்ணு
புதைந்துவிட்டு — நிகழ்காலச்
சூரியனைத் தொலைத்துச்
சூனியத்தில் வாழ்வு.
கரிநாய் எங்கும் -
காழ்ப்புகளில் பேரிரைச்சல்
மௌனங்கள் மௌனித்து
மணித்துளிகள் எண்ணிறைவு
யௌவனமும், வாலிபத்தின்
யாத்திரையும், சிலகனவும்
வேகம்! வேகத்தின்
விசையினிலும் ஆழ்மனது
தேடும் பழக்கற்ற
தொலைச்சி மரம் சாய்ந்து! கண்
காணும் படிக்கற்கள்
திசையெல்லாம் பெருவெளிச்சம்
ஆற்றின் கலகலப்பு,
அணிற்பிள்ளை விளையாட்டு
"தேற்று" மறுபடியும்
நிகழ்காலத் தே தெரியும்.

சுற்றிலும் பொய்களைச்
சுமந்தபடி இப் பயணம்.
சுற்றுப்புறத் தெருநீர்
கடிதங்களில் உருக்கம்
செழித்திருக்கும் மனக்கடலின்
தேடு அலை வீச்சு
இந்த வரலாற்றில்
இது புதிது! இது புதிது!!

நேற்றும் நிலவும்
நிரந்தரமாய்த் தெரியவில்லை
நித்தம் மனக்கலக்கம்
நிழல்தேடும் ஒத்திகைப்பு
சுற்றும் பிரிந்து
சுகம் மறந்து நிம்மதிகள்
அழிந்துபோய் விட்டதனால்
ஆத்மாவில் வக்கிரிப்பு
இருப்பின் நிலைப்பாடு
இற்றுப்போய் விட்டதுவே
கறுத்த மேகம்
கனவு வெளியில் நிறைந்து
இருளாகி - இருளாகி -
எல்லாமும் பேசிலோய்.....

ஆனந்த் பிரசாத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதியன்

# ஒரு மனிதனும் எங்கள் தேசமும்..

5

"ஓ" என்று இரைந்து கொண்டிருந்த அந்தக் கடலின் பேரோசையின் நடுவே அப்படகில் இருந்து எழுந்த ஒப்பாரி அழுகை பெரிதாக இருக்கவில்லைதான். கடலில் குதிக்கப் போன மணியன்னரை சமாதானப்படுத்தி சிறீர் தடுத்து விட்டனர்.

ரமணியும் ஆரணியும் கரங்களை இறுக்கமாகப் பிடித்த வண்ணம் தூரமாக வந்து கொண்டிருந்த கடற் படகை பார்த்து திகைத்துப் போய் நின்றனர். கதிரேசனும் சிவகாமியும் கரங்களை பற்றி வண்ணம் நின்றுள். கடலில் குதித்து தற்கொலை செய்து கொள்வதா இல்லையா என அவர்கள் கண நேரங்களில் முடிவெடுக்க முடியாமல் தவித்தனர். நிதானமாக சிந்திக்க முடியாமல் இருக்கும் பரபரப்பான சூழ்நிலை குறுகிய 'கணநேர அவகாசம் இவற்றோடு படகில் இருந்து எழுந்த கொண்டிருந்த அழுகையோ என்பன இவர்களையும் ஒரு முடிவும் எடுக்க முடியாத நிலைமைக்கே தள்ளியது. உயிரோடு சிறிலங்கா ஆயுதப்படையினரிடம் சிக்கி சித்திரவதைகளை அனுபவிக்க இவர்கள் தயாராக இல்லை.

இவர்களது படகில் குழப்பமும் பதட்டமும் எழுந்து கொண்டிருந்த வேளை வேகமாக இவர்களை நெருங்கிய அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கடற்படகு அசுராக, எழுதாக, யார் நெருங்கப்பாக் வந்து நின்றது. பிரமாண்டமான அந்தக் கடற்படகு ஒரு கடற்படைப்படகு தான் என்பதில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லை.

அந்த கடற்படை படகில் இருந்து வட்டமான ஒரு வெளிச்சம் எழுந்து வந்து கடற்பரப்பில் ஒளிபரப்பியது. பிரகாசமான அவ்வெளிச்சம் இவர்களது படகைச் சுற்றிய கடற்பரப்புகளில் எல்லாம் விழுந்து ஒளிபரப்பிய பின் மெதுவாக நகர்ந்து படகில் வட்டமாக விழுந்தது. கண்களை கூசவைக்கும் மிகப் பிரகாசமாய் அவ்வொளி இருந்தது.

இதற்கிடையில் மணியன்னரது ஆலோசனைப்படி படகிலிருந்த அனைவரும் கைகளை உயரே தூக்கிய வண்ணம் பெண்கள் முன்புறமும் அவர்களுக்கு பின்னே ஆண்களும் நின்றனர். அகதிகளின் படகு என்று தெரிந்தால் ஒருவேளை கடற் கடையினர் தாக்காமல் இருக்கக் கூடும், என்று அவர் அபிப்பிராயம்.

கடற்படையினர் வெளிச்சத்தைப் பாய்ச்சி நோட்டம் விட்ட பின்னர், மெதுவாக நகர்ந்து சிறிய படகை நெருங்கினர்.

கடற்படைப்படகு தம் அருகில் வந்ததுமே துப்பாக்கிப் பிரயோகத்தையும், பீரங்கித் தாக்குதலையும் படகு எரிவதையும் கற்பனை செய்திருந்தவர்கள் சில நிமிடங்கள் சென்ற பின்னரும் ஒன்றும் நிகழவில்லை என்றதும் இந்தக் கடற் படை படகு இந்திய கடற்படையினரை சேர்ந்ததாக இருக்குமோ

என்று ஒளி நம்பிக்கை பிறக்க ஆரம்பித்தது. இலங்கைக் கடல் எல்லைத் தாண்டி நிற்பதால் இந்தியக் கடற்படையினரின் கடற்படகாக இருப்பதற்கு வாய்ப்பு அதிகம் உண்டு என்று நம்பினர்.

இவர்களின் சிறிய படகுக்கு நெருக்கமாக அப்பெரிய கடற்படகு வந்து நின்றது. கடற்படை படகின் தளத்தில் இருந்த சில தலைகள் தெரிந்தன. அவர்கள் இலங்கையினரோ இந்தியரா என இனம் காணமுடியவில்லை. இந்நேரம் தான் கடற்படை படகில் இருந்த ஒரு படைவீரனின் குரல் கேட்டது "எடேய ..எங்க போறது ? ம்... பொம்பிளை எல்லாம் இருக்குது நாம வாறது". சிங்களமும் தமிழும் கலந்த கொச்சை மொழியை கேட்ட போது அது சிறிலங்கா கடற்படையினர்தான் என்பது சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிந்தது. அந்தக் கடைசி நேரத் ஒளி நம்பிக்கையும் இழந்து அந்த ஆழ் கடலின் மத்தியில் அந்த இதயங்கள் தவித்தன.

(தொடரும்).

"நாட்டை நினைப்பாரோ? — எந்த
நாளினிப் போயதைக் காண்ப தென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ? — அவர்
விம்மி விம்மி விம்மி விம்மியழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே




உங்கள் குழந்தையின் பிறந்ததின வாழ்த்தை பார்வையில் பிரசுரித்து மகிழுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சிவா ஜுவலறி

இலங்கையை நினைவூட்டும் வண்ணம் யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த நகை செய்யும் வல்லுனர்களால் தயாரிக்கப்படும் நகைகளுக்கு ரொறன்ரோவில் முதலிடம் விரும்பிய டிசைன்கள் நங்கையர் விரும்பும் நவநாகரிக வித விதமான ஆபரணங்கள் அனைத்திற்கும் சிறந்த ஒரே இடம்.

721 Bloor St. W., Suite #2c,
Toronto, Ont.

(416) 531-4867

ஆபரணங்கள் அழகுக்கும்
உங்கள் முதலீட்டுக்கும்

- guaranteed 22 karat gold, bangles, thalikkodi, rings, chains, wedding and engagement jewellery, diamond rings, and other ornaments of strictly the best quality
- unbeatable lowest prices
- custom-made jewellery
- minor repairs and adjustments

| வியாபார நேரம் | |
|---|---|
| செவ்வாய் - வெள்ளி | 12.30-7.30 |
| சனி - ஞாயிறு | 10.00 - 8.00 |
| திங்கள் | CLOSED |

SRI SIVA
Jewellery

Subway: Christie

# எழுத்துக்காளான் கடையில் சிரிக்கிறது

**- திலகா ஜோசப்**

ஆதி காலந்தொட்டு நமது தமிழ் மக்கள் மத்தியிலே பாரம்பரியம் பழக்க வழக்கங்களில் ஒன்றாக சீதனமும் அமைந்திருந்தது. நமது மூதாதையர் அன்றைய நிலையில் சமுதாய மேம்பாடுகளை முன்வைத்து பல நல்ல நோக்கங்களுக்காக சில ஒழுங்கு முறைகளை உருவாக்கி அமைத்திருந்தனர். அப்படி உருவாக்கப்பட்ட ஒழுங்கு முறைகளுக்கமைய கல்யாணமாகிக் கணவனோடு வாழப்போகும் பெண்ணுக்கு சீர் அளித்துக் கௌரவப்படுத்தும் நோக்கோடு தான் சீதனம் வழங்குவதை ஒரு வழக்காக அமைந்திருந்தார்கள். தனது பெற்றோர் உற்றார் தனக்கு மனமுவந்து எதுவித நிர்ப்பந்தங்களுமின்றி ஆசையோடு அளித்த பரிசு என்ற மகிழ்வோடும் தன்னம்பிக்கையுள்ள மனத்தோடும் இல்லறத்தில் புக பெண்ணுக்கு உதவியாக இருந்தது. இத்துடன் கணவனது உழைப்பால் ஈடு செய்ய முடியாத நிலைமைகள் ஏற்படும் போது அல்லது கணவனுக்கே ஏதேனும் சுகயீனமோ அன்றி அபத்தமோ ஏற்படும் வேளை உதவியாக இருக்கும் என்பனவும் சீதனம் கொடுக்கக் காரணிகளாய் அமைந்திருந்தன.



ஆனால் இன்றைய நிலை என்ன? மேலே கூறப்பட்ட நல்ல நோக்கங்கள் மறைந்து வெறும் சீதனம் மட்டும் வாழ்கிறது. பெற்றவர்கள் தம்மிடமிருந்த தனத்தில், பொருளில் ஒரு பகுதியைப் பாசத்துடன் கொடுத்து மகிழ்ந்தது போல் பெண், குழந்தை பிறந்து விட்டதே சீதனம் தேட வேண்டுமே என்று அங்கலாய்க்கும் நிலைமை. அடுத்து இரண்டு பெண் பிறந்து விட்டால் அலுப்புற்று வெறுக்கும் நிலைமை இன்று. அத்துடன் கல்யாணச் சந்தையில் முடிந்தவரை போட்டி மனப்பான்மையுடன் சீதனம் அறவிடப்படுகிறது. இதனால் ஆண்குழந்தைகளைப் பெற்றவர்கள் பிள்ளைகளை வளர்ப்பதே சீதனம் வாங்கும் நோக்கத்தோடு தான் என்று சொன்னாலும் மிகையாகாது. இப்படிப்பட்ட ஒரு நிலை உருவானது எப்படி- ஏன் என்றெல்லாம் யோசிப்போமேயானால் நமது சமூகத்தின் குறுகிய நோக்கமும் சுயநல மனப்பான்மையும் சொல்லாமலே வெளிப்படும்.

எல்லாவற்றிற்கும் முதலில் நாம் கல்யாணம் என்றால் என்ன என்று சிறிது ஆராய்ந்து பார்ப்போம். ஒரு ஆணும் பெண்ணும் உண்மையான உள்ளன்போடு உயிருள்ளவரை பிரியாமல் சுக துக்கத்தைப் பகிர்ந்து ஒருவரை ஒருவர் பேணி அன்போடு வாழ்வதை உறுதிப்படுத்துவது தான் கல்யாணம். ஆனால் நமது சமூகத்தில் எந்தக் கல்யாணத்தில் அன்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கல்யாணம் என்ற சொல் காதில் விழுமுன் எழும் கேள்வி சீதனம் எவ்வளவு என்பது தான். சாதாரணமாகச் சீதனப் பிரச்சனையைப் பற்றிச் சொல்லப் புகுந்தால் அதற்கான குற்றவாளிகளாகக் கணிக்கப்படுவது இளைஞர்கள் தான். ஆனால் அது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் முழுக்க முழுக்க ஆண்பிள்ளைகளைப் பெற்ற அன்னையர் தான் சீதனம் வாங்குவதில் தீவிரமாக இருக்கிறார்கள். இதை எழுதுவதற்காக அன்னையர் என்மீது மனத்தாங்கல் கொள்ளலாம். எனினும் உண்மை கசப்பானது என்ற உண்மையையும் சொல்லத்தானே வேண்டும். மேலும் ஒரு விஷயத்தை விட்டுவிட்டேன். அம்மாமாரைத் தாண்டி விட்டு அவர்களுக்குப் பின்னால் நின்று சீதனம் வாங்கும் இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். கேட்டால் அம்மாவைத் திருத்தி செய்ய என்று ஒரு நொண்டிச் சமாதானம். இதுவும் கசப்பான ஒரு உண்மை தான். எனவே மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுத்து மேலே படிக்குமாறு கோரி விஷயத்தைத் தொடருவோம்.

மிகவும் பின்னோக்கிப் பாராது ஐம்பது வருடங்கட்கு இடைப்பட்ட காலத்தைப் பார்க்கும்போது பெண்கள் அதிகம் படித்திருக்கவில்லை. அத்துடன் உத்தியோகமோ தொழிலோ பார்த்தவர்கள் மிகவும் குறைவு. ஆனால் ஆண்களில் கல்வித் தகுதிகள் பெற்றவர்கள் உத்தியோகம் பார்ப்போராயும் அல்லாதவர்கள் விவசாயம் மற்றும் தொழில் முயற்சி உடையோராயும் இருந்ததால் பணம் சம்பாதிக்கும் தகுதி பெற்றிருந்தனர். எனவே அவர்களோடு பெண்ணின் நிலையை சமப்படுத்தும் பொருட்டு தங்களிடமுள்ளதில் ஒரு பகுதியை பெற்றவர்கள் அளித்து உதவி செய்தார்கள். ஆனால் இன்று பெண்கள் ஆண்களுக்கு எதுவிதத்திலும் குறைவில்லாத வகையில் சமதையான கல்வியறிவு தொழில் வாய்ப்பு முதலியன பெற்றிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் ஆண்களைவிட உயர்கல்வியும் தொழிலும் பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நமது சமூகத்தில் படித்தபெண்கள் குறைவு அப்படிக் குறைவாக இருக்கும் படித்த உயர்ந்த தொழில் தகுதிகள் பெற்ற பெண்கள் கூடத் தம்மை விடவும் படிப்பில் குறைந்த



தகுதிகளற்ற மாப்பிள்ளைக்கு சீதனம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறாள். இந்த நிலைமை ஒரு பெண் மனதில் எவ்வளவு தூரம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை எவருமே எண்ணிப்பார்க்கத் தவறி விடுகிறார்கள். பெற்றோரின் சுயநலம் எதையெல்லாம் மறக்க வைக்கிறது பாருங்கள். ஒரு பட்டதாரி மாப்பிள்ளைக்கு அதே தகுதியுள்ள பட்டதாரிப் பெண் மனைவியாகிறாள். அறிவு சமம். உழைப்பு சமமாக இருக்க அவளது பெற்றோரை வருத்தி வாங்கிய சீதனம் அவன் மனத்தில் அகங்காரத்தை மூட்டி வக்கரிக்க வைக்கிறது. அதிகார மனப்பான்மை உருவாகிறது. இது குடும்ப வாழ்வின் அன்னியோன்யத்தை அமைதியைப் பாதிக்கும் என்பது அனுபவ பூர்வமான உண்மை. சாதாரணமாக ஆண்கள் மதிப்பை எதிர் பார்ப்பவர்கள். ஆனால் திரும்பிக் கொடுக்க நினைக்க மாட்டார்கள். அப்படியிருக்க சீதனம் வாங்கியதன் மூலம் தன்னையே விலைப்பொருளாக்கிவிட்டு மதிப்பை எதிர்பார்க்க முடியுமா?

எங்கள் சமூகத்தில் திருமணச் சந்தையிலே மாப்பிள்ளை விலைப்பொருளாகிறான். இந்தப் படிப்புப் படித்து இவ்வளவு சம்பாதித்தால் அதற்கு இவ்வளவு சீதனம். வெளி நாட்டில் வேலையென்றால் அதற்கு இவ்வளவு என்று ஒரு வரையறையே அமைக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும் போது சந்தையில் சாமான் விற்பவன் இன் திறமான சாமான் வெளிநாட்டுப் பொருள் இதன் விலை இவ்வளவு என்று பேரம் பேசி விற்பது தான் ஞாபகம் வருகிறது. (வாசகர்கள் மன்னிக்கவும்) தோட்டத்தில் பயிரிட்டவன் அல்லது ஒரு பொருளை உற்பத்தி செய்தவன் அவற்றை விற்பனைக்கு எடுத்துச் செல்வது போல் பெற்றவர்கள் தாங்கள் அருமை பெருமையாகப் பெற்று வளர்த்த பிள்ளைகளை விலைப்படுத்துகிறார்கள். தன்மானத்தை விற்று இப்படி ஒரு வழக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தமிழ் மகளுக்குத் தேவைதானா? ஒரு பணக்காரப் பெண் ஏழை வாலிபனை மனமார ஏற்று மணந்து கொண்டால் அங்கே உள்ளங்கள் ஒன்றுபட்ட நிலையில் கௌரவப் பிரச்சனை எழாது. நிர்ப்பந்தம் மூலம் தாய் தந்தையரைத் தவிக்க வைத்துப் பெறப்பட்ட சீதனம் பெண் மனதில் கசப்பை உருவாக்குகிறது. பெற்று வளர்த்து படிக்க வைத்து ஆளாக்கிய பெற்றோர் சீதனத்திற்காக அலைந்து கஷ்டப்படும்போது பாசம் மிக்க ஒரு மகள் சித்திரவதைப்படுவாள். கணவன் மீது அல்லது ஒரு தமிழ் குடும்பத்தில் மகளாகப் பிறந்துவிட்டோமே என்ற ஆற்றாமையும் கழிவிரக்கமும் ஒருவித விரக்தியை ஏற்படுத்த அன்பு மலர்ந்து மணம் பரப்ப வேண்டிய மனம் வரண்டு போக வாழ்க்கையை நடாத்துகிறாள். இதனால் ஒரு வித யந்திர மனப்பான்மை உருவாகிறது. இதனால் யாருக்கு உபயோகம். சீதனக் கொடுமைக்கு வித்திட்ட புண்ணியம் தவிர பணத்தை மையமாக வைத்துத் தொடங்கப்படும் எதுவுமே வியாபாரம் தான். ஆனால் வாழ்க்கை என்பது புனிதமானதோர் பெருங்காப்பியம். அதை விலைப்பொருளாக்கி அசிங்கப்படுத்துவதற்கும் விபச்சாரத்திற்கும் என்ன வித்தியாசம்.

பாரம்பரியம் பெரும் பேசும் நாம் சிறிது எமது மயக்கத்திலிருந்து விடுபட்டுப் பரந்து நோக்க வேண்டும். ஐரோப்பிய சமூகத்தின் அன்புக்கும் நேர்மைக்கும் முதலிடம் கொடுக்கப்பட்டு திருமணங்கள் நிகழ்வதால் அங்கே அன்பு மலர்கிறது. அன்பைக் கொடுத்து வாங்கிக் கொள்கிறார்கள். பணத்துக்காகப் பெண்ணை விரும்பவோ மாப்பிள்ளைகள் விலை பேசப்படவோ வசதியில்லை. இருவர் உண்மையான அன்பின் மூலம் நேசித்து கௌரவித்து இனிமையான வாழ்வை திட்டமிட்டு அமைத்துக் கொள்கிறார்கள். அதனால் அங்கே எல்லாம்



திட்டமிட்டபடி சுமுகமாக நடைபெறுகிறது. பிரச்சனை உருவானாலும் எதையும் உணர்ந்து ஏற்று அங்கீகரித்து பரஸ்பரம் மன்னித்து வாழும் மனப்பக்குவம் ஏற்படுகிறது. ( அவர்களிடையேயும் குறைகள் பல இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அவற்றைப் பற்றி நாம் சிந்திக்கத் தேவையில்லை. ) எனவே அன்பிருக்கும் இடத்தில் பணம் தலைகாட்டுவதில்லை. இப்போ நமது ஈழத் தமிழர்களில் பல்லாயிரக்கணக்கானோர் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். இவர்கள் இடையில் மாத்திரம் மேற்கத்திய நாகரீகத்தைப் பின்பற்றுகிறார்களே தவிர அவர்களது நல்ல பழக்க வழக்கங்களை மதித்து ஏற்பதில்லை. அப்படிச் செய்வதால் எமது வளர்ச்சி தான் குன்றும். மேற்கூறிய விடயங்களில் நமது தமிழ் பெற்றோரும் இளைஞர்களும் சிறிதளவேனும் அக்கறை காட்டி மாற முயற்சிப்பார்களேயானால் அது நமது சமுதாய வளர்ச்சிக்கு எண்ணிலா நன்மை பயக்கும். அதைவிட்டு விட்டு அங்கே தான் சொந்த மண்ணில் லட்சக்கணக்கில் சீதனத்திற்குப் பறந்தோமென்றால் இங்கு வந்தும் விட்ட பாடில்லை. அங்கே ரூபாவில் கேட்டவர்கள் இங்கு வந்ததும் டொலரில் கேட்கிறார்கள். அங்கு படித்த பெண்களுக்கு மட்டும் தான் தொழில் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இங்கு படிக்காதவர்கள் பாஷை புரியாதவர்கள் கூட தொழில் புரிய முடிகிறது. நூறு சதவிகிதம் எல்லாப் பெண்களுமே உழைப்பவர்கள் தான். அப்படி உழைத்துக் குடும்பப் பொறுப்பில் சரி பாதியைச் சுமக்கும் தகுதி வாய்ந்தவர்களிடம் சீதனம் கேட்பதன் மூலம் இளைஞர்கள் தங்களைத் தாங்களே விற்பனைக்குட்படுத்துகிறார்கள்.

அன்பின் மூலம் ஒன்றுபட வேண்டிய இரு உள்ளங்கள் பணத்தின் மூலம் இணைக்கப்படும் போது அங்கே இனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதம் கேட்காது. அபஸ்வரம் தான் ஒலிக்கும். இதை நமது பெற்றோர் முக்கியமாக அன்னையர் உணர்ந்தால் அவர்களது பிள்ளைகள் வாழ்வு மலர்ந்து மணம் பரப்பும்.

தமிழ் மண்ணில் முளைவிட்ட காளான் கடல் கடந்தும் தன் கோரப் பல் காட்டிச் சிரிப்பதைப் பார்க்கும் போது வேதனையாகவும் வெட்கமாகவும் இருக்கிறது. முதுகெலும்பை அன்னையரின் முந்தானைக்குள் மறைத்து விட்டு வாழும் இளைஞர்களே சிந்தியுங்கள்.

— • —

## சத்யஜித்ரேக்கு பிரான்ஸின் அதியுயர் விருது

இந்தியாவின் பிரபல திரைப்படத் தயாரிப்பாளரும், இயக்குநருமான சத்யஜித் ரேக்கு பிரான்ஸின் அதியுயர் சிவிலியன் (தலெஜன் ஒப் ஹொனர்) வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் பிரெஞ்சு ஜனாதிபதி பிராங்கோயிஸ் மிட்டராண்ட் வியாழக்கிழமை கல்கத்தாவுக்கு சென்று சத்யஜித் ரேக்கு அதற்கு பதக்கத்தை அணிவித்தார்.

சத்யஜித்ரே ஒரு யதார்த்தவாதி என மிட்டராண்ட் பாராட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



MARCHE VICTORIA ORIENTAL INC.
TWO LOCATIONS

MONTREAL
6324 VICTORIA STREET,
(METRO: PLAMONDON)
TEL: (514) 737-4718.
OPEN 7 DAYS

WEST ISLAND
4759 BLVD DES SOURCES,
PIERREFONDS,
TEL: (514) 685-2280.
OPEN 7 DAYS
FREE PARKING.

மரக்கறி எண்ணெய் MARINA VEG. OIL 15.99
புழுங்கல் அரிசி PARBOILED RICE 20Kg 32.00
பஸ்மதி அரிசி PASMATHI RICE 5kg 10.99
FIVE ROSE FLOUR 20Kg 13.99

WE HAVE THE BEST QUALITY No 1 (stone free) JAFFNA S.R. No 1 PARBOILED, RED RICE
எங்களிடம் தரமான முதல்தரமான கல்லில்லாத S.R.No 1 குத்தரிசி, சிவப்பு.பச்சை என்பனவும் கிடைக்கும்
WE DO WHOLESALE
BUY IN BULK & GET DISCOUNT
பொருட்கள் தொகையாக வாங்குமிடத்து மேலதிக கழிவு வழங்கப்படும்.

**** TAMIL MOVIES 49 C ****
(24 Hours with I.D. only)
தமிழ் வீடியோ படங்கள் 49 சதம்.
(அடையாள அட்டையுடன். 24 மணித்தியாலம் மட்டுமே)

MARCHE VICTORIA ORIENTAL INC.

# இது எங்கள் தேசம்...

கொண்ட நேயத்தால்
சிட்டுக்குருவியும் - மனித
இருப்பிடம் தேடிப் பின்
சென்றது அகதிமுகாம் நோக்கி.
மனித நடப்புகள் தெரிந்தும்
சொல்லிடாது கழுதைகள்
தனைத்தேடி வரக்கூடும்
என்பதால்.

ஆற்றில் பெருவெள்ளம் - பின்
மேட்டிலும் சில நாணல்கள்.
மேட்டில் நாணலுக்காய்
ஆறு ஓடும்போது
கரையோர நாணல்கள்
அமிழ்ந்தும் போம்.
அழிந்தும் போம்.

நாட்டிலும் பெருவெள்ளம்
மக்களும் கரையோர
நாணல்களாய்
அமிழ்ந்தும், அழிந்தும்
போயினர்.



வரண்ட முலைகளை
திரண்டியே கறந்திடும்
குழந்தையின் கரம்.
தாயின்
நினைப்பிலும், விழிப்பிலும்
தெரிந்திடும் வறுமை.

இது எங்கள் தேசம்

எங்கள் தேசத்தில்
நடந்தவை நினைவுகளாயின
விகாரங்கள் வனப்புகளாயின
முடிவுகள் எங்கோ மூலையில் முடங்கின
தோழமை வரண்டகால வனவாசம் போயிற்று

இவைகளாகியே
போயின காலம் - பின்
நுழைந்தது மார்கழி.
வருந்திய மனிதர்களுக்கு
வாழ்த்துச் சொல்லி
வந்தது இன்னுமோர்
ஆண்டு.

ஜெயகாந்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெண்மையாய் விரிந்து கிடந்தது அந்தப் பிரதேசம். வசந்தம் தொலைந்து போன மரங்கள் மொட்டையாய் ஆங்காங்கே நின்று கொண்டிருந்தன. படுவேகமாக வீசிக்கொண்டிருந்த குளிர்காற்று மனிதக்காதுகளைக் களவாடிக் கொண்டிருந்தது.

முழங்காலளவு கொட்டிக் கிடந்த பனிக் குவியலில் தட்டுத்தடுமாறி கனேடிய குடிவரவு அலுவலகத்தினுள் நுழைந்து அங்கு ஏற்கனவே தரித்து நின்ற பயணிகள் (அகதிகள்) வரிசையில் சேர்ந்து கொண்டான். நமது கதாநாயகன் கார்த்திகேசு, கையிலிருந்த பெட்டியைக் கீழே வைத்துவிட்டு தன்னைச் சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்டான். கையுறைகளை இன்னும் கழற்றவில்லை. மெல்லியதாக நடுங்கிக்கொண்டிருந்தான். (இரண்டு காரணங்கள்) ஒன்று, குளிர், மற்றது பொய் சொல்லப் போகிறோம் என்பது)

சாண்யா



நீங்கள் கையில் ஒரு, வீடியோ கமரா வைத்திருந்தால் அதன் வியூ பைண்டரில்" அவன் முகத்தை நிறுத்தி மெல்ல 'சூம்' பண்ணிக்கொண்டு வாருங்கள். 'டைட் குளோசப்பில்' பார்த்தால் மீசையில் படர்ந்து உறைந்திருந்த பனி உருகி ஓடிக்கொண்டிருக்கும். குளிரின் நடுக்கத்தை வெளியில் அதிகம் காட்டக் கூடாது என்று பல்லைக் கடித்தபடி கட்டுப்படுத்திக் கொண்டிருப்பது தெரியும். கண்களில் ஒரு கலவரம் எதிர்பார்ப்பு. புருவங்களைச் சுருக்கிக் கொண்டிருந்தால் ஏதோ 'ரீல்' விட ஆயத்தம் மேற்கொள்கிறானென்று அர்த்தம்.

நல்ல அடர்த்தியான தலைமயிர் (இனிமேல் போகப் போக உதிருமென்று நண்பன் மூலம் இவனுக்குத் தெரியும்) அகன்ற நெற்றி மேல்நோக்கிச் சிறிது எழும்பிய அசட்டுத்தனமான மூக்கு இரண்டு, மூன்று நாட்களிருக்கும் ஷேவ் செய்து.

இந்தப் பொன்னம்பலம் கார்த்திகேசுவுக்கு (கார்த்திக் என்று யாராவது கூப்பிட்டால் வடையும், பிளேன் ரீயும், வாங்கிக் கொடுக்கக் கூடிய பேர்வழி) சுமார் முப்பது வயதிருக்கும். அளவான உயரம் மெலிந்த தேகம் விசாரிக்கும் அதிகாரி பரிதாபத்தில் உடனடியாக 'வாண்டட்' கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை, எதியோப்பியாவிலிருந்து வருபவன் போல ஒரு தேகக் கட்டு.

இதற்கு மேல் வீடியோ கமராவினால் எதையும் அறிந்து கொள்ள முடியாது. சத்தியமாக இவன் இலங்கையிலிருந்து தான் வருகிறான். இடையில் ஒருவருடம் அமெரிக்காவில் அஞ்ஞாதவாசம். (கொஞ்சம் டாலர் பிடிக்கலாமென்று) பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவிலிருக்கும் தம்பி, மச்சான், மருமகள், மாமாகுடும்பம் சித்தப்பா குடும்பம், ஒன்றுவிட்ட அண்ணர், தம்பி, காலஞ்சென்ற பெரியப்பாவின் இரண்டாம் தாரத்தின் மகள், கூடப்படித்த சுந்தரம்.....( கொஞ்சம் மூச்சுவிட்டுக் கொள்ளுங்கள் ) எல்லோருடைய அன்பின் அழைப்புக்கிணங்கத்தான் இந்த விஜயம்.

வரிசை மெல்ல நகர்ந்து ஒவ்வொருவராக விசாரணைக்கென உள்ளே அழைத்துச் செல்லப்பட்டனர். இவன் முறை வந்ததும் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி (கொஞ்சம் இளசாக இருந்திருக்கலாம்) இவனை அழைத்துச் சென்று ஒரு அதிகாரி யின் முன்னால் விட்டுவிட்டுச் சென்றாள். அவர் இவனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார் இவனுக்குக் கொஞ்சம் தெம்பு வந்தது.

இவனைப்பற்றிய விபரங்களை விசாரிக்க இவன் சொல்வது அவருக்கு விளங்காமல், அவர் கேட்பது இவனுக்குப் புரியாமல்- இறுதியில் இருவருக்குமே ஏதோ ஒன்று விளங்கி அவர் இவன் கையில் சில காகிதங்களை திணித்து 'குட்லக்' சொல்லியனுப்ப வெளியில் வந்த இவனை- அழைத்துச் செல்ல வந்த தம்பி முருகேசுவும், கூடப் படித்த சுந்தரமும் எதிர் கொண்டனர்.

" கலக்கியெறிஞ்சு விட்டன், மச்சான்" குளிர் இப்போது மிகவும் குறைந்து விட்டது. மாதிரி இவனுக்குத் தோன்றியது.

"மச்சான் கார்த்திக்? நீ லக்கி காயடா' இல்லாட்டில் பின்னேரம் வரையும் வைத்து மினக்கடுத்துவான்கள். இன்டைக்கு ஆட்கள் குறைவென்டதாலை உனக்கு வேளைக்கே முடிஞ்சுது.



என்றபடி இவன் பெட்டியை வாங்கி கார் (நிசான் புல்சார் 88 மாடல் புதியது) டிக்கியுள் வைத்துப் பூட்டினான். சுந்தரம். மூவரும் ஏறிக் கொண்டதும் கார் மொன்றியால் நோக்கிப் புறப்பட்டது.

வழி நெடுகிலும் பால்ய நினைவுகளை மீட்டுக் கொண்டு வந்தான், கார்த்திகேசு. கத்தேக்கக்காய்,குத்தித் சாப்பிட்டதிலிருந்து சுப்பிரமணி வாத்தியின் கோழியை இருவரும் கல்லால் அடித்தது வரை பரவசப்பட்டுப் பேசிக் கொண்டு வந்தான்.

உவன் அமெரிக்காவில் இருந்து கட்டையில கதைக்கேக்கையும் உதைத்தான் சொல்லி அறப்பான், என்று மனதுக்குள் புலம்பிய சுந்தரம்-

"வேக் பேமிற் எப்ப தருவினமென்டு சொன்னவை? என்று கேட்டான்.

" மூன்டு மாதம் செல்லுமாம் "

" நல்லது ஆறுதலாக வரட்டும். அதுக்குள்ள ஒரு அன்கு அன்னவாம்".

தம்பி முருகேசுக்கு அண்ணர்சின்ன வயதில் காது முறுக்கின கோபம் இருந்தாலும், "சொனி வோக் மன்" கொண்டு வந்தது பற்றி " இப்ப கேட்பமோ, பிறகு கேட்ப மோ என்ற பெரும் சிக்கலிலிருந்தான். எதற்கும் வீட்டில் போய்ப் பார்ப்போமென்று மௌனம் சாதித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வழியாக 'நாமுரி' வந்து சேர்ந்ததும் 'மௌண்டன் சைற்றில்' இவர்களை இறக்கி விட்டு "மச்சான் பின்னேரம் என்ரை ரூமில தான் உனக்குச் சாப்பாடு நான் ஒரு ஏழு மணிபோல வந்து உன்னைப் 'பிக்கப்' பண்ணிக் கொண்டு போறன் நீ இப்ப குளிச்சு 'ரெஸ்ட் எடு. பை, பை என்றபடி சுந்தரம் புறப்பட்டு போனான்.

இந்த சுந்தரத்தைப் பற்றி நீங்கள் பின்பு நன்கு தெரிந்து கொள்வீர்கள். ஆனால் இப்போது போகும் வழியில் என்ன நினைத்துக் கொண்டு போகிறான் தெரியுமா?

" உவன் எப்படியும் ஒரு அஞ்சுக்குக் குறையாமல் அமெரிக்கன் டொலர் வைத்திருப்பான். ஆள் பேய்க்காய். பின்னேரம் எப்படியும் கேட்டு 'சேஞ்' பண்ண வேண்டும். என்ர காலை வேலைக்கு லீவு போட்டு விட்டுப் பின்னேர வேலைக்கு ஆள் மாத்தி விட்டு விட்டு இவனுக்கு பார்ட்டி வைக்கிறதிலை ஒரு பிரயோசனமிருக்க வேணும்"

மாலை ஏழு மணி சுமாருக்கு சுந்தரம் கார்த்திகேசுவை அழைத்துச் செல்ல வந்தான்.

" அடடே, சொன்ன நேரத்துக்கு வந்திட்டியே"

அப்போதுதான் தூங்கியெழுந்திருந்த இவன் வியப்பால் கவினான்.

" மச்சான், டேய் நான் சரியான "பங்சுவாலிட்டி"யடா, வெளிநாட்டிலிருந்து கொண்டு இதைக் கூடப் பழகாட்டின்?



என்று தொடங்கிய சுந்தரம் தொடர்ந்து சில ஆங்கிலப் பழமொழிகளை ( நேரத்தின் முக்கியத்துவம் பற்றியது) உதிர்க்கவாரம்பித்தான்.

" உது வில்லங்கம்தான்" என்று மனதுள் நினைத்த இவன்.

" சரி, கொஞ்ச நேரம் இரு மச்சான் நான் புஷ்யமாகிக் கொண்டு வாறன். என்று காய் வெட்டிவிட்டுக் குளிக்கப் போனான்.

அரைமணியில் புறப்படுவதற்கு தயாராகி விட்ட கார்த்திக்கை ( சத்தியமாக இப்போது இவனிருக்கும் தோற்றத்தில் இப்படித்தான் அழைக்கத் தோன்றுகிறது ) அழைத்துக் கொண்டு சோவேயிலிருக்கும் தன் அப்பார்ட்மென்டுக்கு அழைத்துப் போனான் சுந்தரம்.

அங்கு மேலும் சில நண்பர்களிருந்தனர். அவர்களுக்கு இவனை அறிமுகம் செய்து வைத்தான் சுந்தரம்.

" கார்த்திக், மீற் மை பிரெண்ட் ரவி"

" நைஸ் ரு மீற் யூ ரவி"

" மச்சான், திஸ் இஸ் மை ரூம் மேற் குணம்"

"ஹெலோ, குணம்"

" இவர் என்னோட வேலை செய்யிற பரமேஷ்"

" ஹெலோ "

" ஹாய் "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வழியாக " நின்றெடும் ஜவராஜெம் " என்று எல்லோரும் சோபாகளில் அமர்ந்தனர். உள்ளே சென்ற சுந்தரம் திரும்பி வரும்போது ஒரு ஜே. அன்ட். பீ (1.14லீற்) உடன் வந்தான். இதனைக் கண்ட பரமேஸ்

2 என்ன சுந்தர் நீ, உதைப்பற்றி ஒண்டும் எனக்குச் சொல்லவில்லை. நான் அதிகம் எடுக்க மாட்டன் ஐ. யாம் சொறி.

என்று செல்லமாகச் சிணுங்கினன். இதற்கு அர்த்தம் இந்த ஒரு 1.14 லீற்றர் காணாது என்பது சுந்தருக்கு நன்கு தெரியும். அவன் இதைப்போல எத்தனை பம்மாத்துகளைக் கண்டவன்.

சோபாக்களுக்கு நடுவேயிருந்த கண்ணாடி மேசையில் அதை வைத்து விட்டு கிளாஸ்களையும் "ஸ்ப்பிறைற்' பெரிய போத்தலொன்றையும் கொண்டு வந்து வைத்தான்.

" கமோன், பாய்ஸ் "

எல்லோரும் தம்தமது அளவுக்குக் கலந்து எடுத்துக் கொண்டு -

" சியேர்ஸ் "

என்று சொல்லி மூச்சைப் பிடித்துக் கொண்டு குடித்து - மறக்காமல் முகத்தையும் ஒரு தரம் சுளித்தபின் கிளாஸ்களைக் கீழே வைத்தான்.

" முதல் "ட்றிங்" இப்படித்தான் மச்சான்" என்று ரவி சொன்னதை 283வது தடவையாகத் தான் கேட்பதாகக் குணம் நினைத்துக் கொண்டான்.



ரீ.வீ.யில் காலஞ் சென்ற மாண்புமிகு தமிழக முதல்வர் " இதயமே, இதயமே தேன் வேண்டும்" என்று உருக்கமான வேண்டுகோளொன்றை விடுத்துக் கொண்டிருந்தார்.

" மச்சான், தமிழ் நாட்டிலை இருக்கிற எங்கடை ஆட்களையெல்லாம் திருப்பி ஊருக்குப் போகச் சொல்லிப் போட்டாங்களாம். போகாதவையை பிடிச்சுக் கப்பலேத்தி அனுப்புகினமாம். சிவத்தின்ரை மாமாவோடு முந்த நாள் மற்றுசுக்குக் கதைக்கேக்க சொன்னர்.

என்று குறுக்கிட்டான்.பரமேஸ். இந்த மாதிரியான சூழ்நிலைகளில் அரசியல் பேசுவதை கார்த்திகேசு அறவே விரும்புவதில்லை.

" பரமேஸ், ஊரிலையும் இப்ப பிரச்சனை கொஞ்சம் குறைந்த மாதிரித் தெரியுது. முதலாவது அநியாயமாகப் பொதுசனம் " ஷெல்' அடிபட்டுச் சாகிறதெல்லாம் குறைஞ்சு போச்சு. இனிப் போக்கு வரத்தும் கொஞ்சம் சுமுகமாகிவிட்டது. என்றால் எங்கட சனங்களுக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கிடைக்குமே, என்ன மச்சான்?

இதைக் கேட்ட சுந்தரம், குறுக்கிட்டு ஆவேசமாகப் பேசினன்.

"விசர்கதை கதைக்கிறியள் இப்ப பிரச்சனை ஓய்ஞ்சு போச்செண்டால் என்ன நடக்கும் தெரியுமே? எங்களை எல்லாம் பிடிச்சு உங்கடை நாட்டிலை இப்ப குழப்பமொண்டுமில்லை. நீங்கள் அங்க போய் இருங்கோ என்று "டிப்போட்' பண்ணி விடுவான்கள் பேய்க்கதை கதைக்கிறியள், பெடியள் நல்லாய் அடிபடட்டும் விடு"

எங்கிருந்ததான் கார்த்திகேகவுக்கு அவ்வளவு பலம் வந்ததோ தெரியாது, முழுயும் தறவாயிலிருந்த ஜே. அன்ட்.பீ போத்தலை லாவகமாகப் பற்றி இடமிருந்து வலமாக வீசி, சுமார் நாற்பத்தி ஐந்து பாகையில் உயர்த்தி சரியாக சுந்தரத்தின் நெற்றிப் பொட்டுக்கும் மூக்கிற்கும் நடுவேயுள்ள பள்ளத் தாக்கில் சற்றும் எதிர்பாராது ஓங்கி..........

முறையே இரண்டு ஜெயலலிதாக்கள் நான்குஅல்லது ஐந்து கார்த்திகேககள், சில நட்சத்திரங்கள் வீடியோவில் படம் முந்ததும் திடீரென்று வெள்ளையும் கறுப்புமாக வருமே அதுபோல கொஞ்சநேரம் வந்து –'தொப்' பென்று விழுந்தான் சுந்தர் என்கிற சுந்தரம்.

------ --------

பொன்னம்பலம் கார்த்திகேசு தன் தம்பியுடன் 'லோயர்' வீட்டுக்கு அடிக்கடி 'அப்பொயின்ற் மென்ற்' வைத்துக் கொண்டு அலைவதாகவும், எல்லாம் முடிந்த பின்பு பேசாமல் ஊருக்குப் போய்த் தொலைவோம் என்று சிந்தித்துக் கொண்டிருப்பதாகவும் சமீபத்தில் வந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

பார்வை எதிர்பார்க்கின்றது.
--------------------

வாசகர்களிடம் இருந்து விமர்சனங்களையும், படைப்பாளிகளிடம் இருந்து கவிதை, சிறுகதை, கட்டுரை, இலக்கிய, அரசியல், ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றது.




* STRICTLY THE BEST QUALITY GUARANTEED 22Kt GOLD, BANGLES AND ENGAGEMENT RINGS.

* UNBEATABLE LOWEST PRICES


* SPECIALIZED IN MALIYA MUTTU, PRABHA AND THALIKODI CHAINS

* WE DO MINOR REPAIRS AND ADJUSTMENT



# J.P.S. jewellers inc.

5991 VICTORIA Ave., Suit 2,
MONTREAL, QUEBEC H3W 2H6
TEL: (514) 343-5333
TELEX: MTL 05-25-134




* உத்தரவாதமுள்ள 22 காரட்டில் அமைந்த வளையல்கள், நிட்சயார்த்த மோதிரங்கள்.

* மிகக் குறைந்த விலையில்

* தரமான மல்லிகை முத்து, பிரபா மற்றும் தாலிக் கொடி

* மற்றும் சிறு திருத்தவேலைகட்கும்

MONDAY CLOSED
TUESDAY-SATURDAY
10 A.M.-7.30 P.M.
SUNDAY
12 NOON-6 P.M.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS FROM

# WOODLANDS

**A FINE TRADITION IN INDIAN COOKING - VEGETARIAN AND NON - VEGETARIAN**

SPECIALIZING IN SOUTH AND NORTH INDIAN DISHES – CATER PARTIES

## வூட்லன்ட்ஸ்

உணவகம்.

தென்னிந்திய தமிழ் உணவு வகைகள்

இட்லி
வடை
மசாலா தோசை
ஊத்தப்பம்
சாம்பார்
சைவ உணவு வகைகள்.

*IDLI*
*VADA*
*MASALA DOSA*
*UTHAPPAM*
*SAMBAR*
*VEGETARIAN THALI*
*VEGETARIAN PLATE*
*AND MORE*

**1241, GUY(CRNR ST.CATHERENE)**
**MONTREAL , QUEBEC**
TEL: (514) 933-1553



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரமின்றி வியாபாரமில்லை

# தமிழ்த்தென்றல்


வியாபாரமின்றி விளம்பரமில்லை

மொன்றியால் தமிழ் நேயர்களுக்காக
பல வருடங்களாக மொன்றியால் CFMP1410
அலை வரிசையில் ஒலிபரப்பிவரும்
**தமிழ்த்தென்றல்** இனிய பாடல்கள்,
உலகச்செய்திகள், இலக்கிய விருந்து
போன்ற பல சுவையான அம்சங்களுடன்
காற்றில் மிதந்து வருகின்றது.
உங்கள் குழந்தைகளின் பிறந்தநாள்
விழாக்களை அறியத்தரவும்,
வியாபார ஸ்தலங்களை விளம்பரப்படுத்தவும்,
**தமிழ்த்தென்றல்** உங்களோடு இணைகின்றது.
நிகழ்ச்சியின் விமர்சனங்களை **தென்றல்**
எதிர்பார்க்கின்றது.









# MUKESH JEWELLER



# முகேஷ்

## ஜுவலர்ஸ்

தரமிகுந்த இந்திய
தங்கநகைகளுக்கும்
நங்கையர் நாடும் நவ
நாகரிக தங்க,வைர
வெள்ளி ஆபரணங்க
ளுக்கும், நம்பகரமான
ஒரே ஸ்தாபனம்.
உங்கள் தேவைகட்கேற்ப
ஆபரணங்களை அழகு
பெறத்தயாரிப்பதற்கும் புனரமைப்
பதற்கும் இன்றே நாடுங்கள்

620 கர்காட் வீதி
CATCHCART St.

320 அறை
ROOM

தொலைபேசி
TELEPHONE 861-3110